# சிவகாமியின் படைப்புகளில் பெண்ணியம், சீர்திருத்தம் பற்றிய ஓர் கண்ணோட்டம்

***ப. முருகானந்தம்***
***முனைவர் பட்ட ஆய்வாளர்***
***ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி***

**முன்னுரை**

உடல்மொழி, சாதி சார்ந்த பிரச்சினைகள், சாதியும் உடலரசியலும், கற்புமொழி, பண்பாட்டுக் கூறுகள், காதல், அரவாணிகள் பற்றிய சிந்தனைகள், சாதியமும் சமூகக் கட்டுப்பாடுகளும் ஆகிய இவற்றைப் போன்ற சிவகாமியின் படைப்புகளிலிருந்து ஓர் சிறப்புப் பார்வை.

**உடல்மொழி**

அறிவுவளர்ச்சியின் ஓர் அடையாளமான விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், நவீனக்கருவிகளின் வரவு ஆகிய இவை காரணமாக ஒத்திசைவில் இயங்கவேண்டிய உடல் - மனம் ஆகிய இரண்டிலும் அறிவுக்கு (மனம்) அதிக முக்கியத்துவம் வளர ஆரம்பித்தது. அறிவின் வெற்றி என்பது அதன் பின்னால் அணிவகுக்கும் உடல்களின் எண்ணிக்கை ஆயிற்று. அறிவு என்ற கருவியின் விளைச்சலாகத் தந்திரங்கள் - சூழ்ச்சிகள், வெற்றியின் படிக்கட்டுகளாகவும் மாறின. குழுவாழ்க்கையின் இறுதியில் வீழத்தொடங்கியிருந்த பெண்ணின் அதிகாரம், குடும்ப அமைப்பில் முற்றிலும் நசுக்கப்பட்டு, பெண் உடல்கள், ஆண்களின் வேட்டைப்பொருள்களாக மாறிவிட்டிருக்கின்றன. பழக்கமும் கூட உடலில் தூண்டல்களை உருவாக்கும் என்பது நாம் அனுபவத்தில் அறிந்துகொண்டது. அனிச்சையும் பழக்கம் காரணமாக இச்சையாகும். உடலசைவுகள்-அதிர்வுகள், மொழியாக்கம் செய்யப்படும் போதே புனைவுகளின் உற்பத்தி தொடங்கிவிடுகிறது. அப்படியிருக்க உடல்மொழி என்பதும் இயல்பற்று புனைவாதல் சாத்தியம் தானே.

**கற்புமொழி**

கற்பு என்பது பாலியலுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகிறது. ஏகபத்தினிவிரதன், கற்புக்கரசி என்று ஆணையும் பெண்ணையும் பாலியல் ஒழுக்கம் சார்ந்து போற்றுகின்ற ஒப்பந்தங்களுக்குக் கட்டுப்படுகின்ற நிலையே கற்பு எனப்படுகிறது. கற்பு என்பது பெண்கள் கடைபிடிக்க வேண்டிய ஒப்பந்தம் என்ற அளவில் அதன்மேல் புனைவுகள் ஏற்றப்பட்டுள்ளன. இந்தப் புனைவுகளை அகற்றி உடலை அடிப்படையாகக்கொண்டு 'கற்பு' என்பது என்ன என்று பார்ப்போம். விலங்குகள் உலகம் வித்தியாசமானது. ஓர் ஆண்மானுக்குக் குறைந்தது இருபது பெண்மான்கள், இல்லாவிடில் அது தன் சமநிலையை இழந்துவிடும். ஒருத்தி-ஒருவன் உறவுநிலை என்பது மனிதனுக்கு இயற்கை வகுத்த விதியல்ல. ஆசை அறுபது நாள் - மோகம் முப்பது நாள் என்ற பழமொழி இதையொட்டித்தான் தோன்றியிருக்க வேண்டும்.

**உன்னிடமிருந்து**
**கலங்கலானதே எனினும்**
**சிறிது அன்பைப் பெற**
**உனது குழந்தையின்**
**தாய் எனும் பொறுப்பை**
**நிறைவேற்ற**
**வெளியுலகில் இருந்து**
**சானிடரி நாப்கின்களையும்**
**கருத்தடை சாதனங்களையும் பெற**
**இன்னும் சிறு சிறு உதவிகள் வேண்டி**

**முடியுமானால்**
**உன்னைச் சிறிதளவு அதிகாரம் செய்ய**
**நான் சிறிதளவு அதிகாரத்தை**
**ஸ்திரப்படுத்திக் கொள்ள**
**எல்லா அறிதல்களுடன்**
**விரிகிறதென் யோனி**

இக்கவிதையில் பெண்விருப்பம் சற்றுமில்லாமல் கணவனே என்றாலும் காரியமாய் அதாவது அதிகாரம் சார்ந்து இயங்குவதை விளக்குகிறது.

**சிலப்பதிகாரக் காதை வழி**

பெண், ஆண் உறவில் கற்பு என்தல்லாது அறம் பிழையாது முறை செய்தலே மக்களனைவருக்கும் சிறந்தது என்பதற்காகவே கண்ணகியின் பாத்திரப்படைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. எனினும் கண்ணகியை, கற்பு என்பதை உலகுக்கு உணர்த்த வந்த பாத்திரமாக நமது இலக்கியவாதிகளும் அரசியல்வாதிகளும் இளங்கோவின் விருப்பத்திற்கெதிராகவே கையாண்டு வருகின்றனர். ஒரு சாமான்யப்பெண் மன்னர்களை நெறிப்படுத்தும் துணிச்சலான கருவியாக, கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே கையாளப்பட்டிருப்பது குறித்து வியப்பேற்படுகிறது. அதுமட்டுமல்ல, ஆடற்கணிகையான மாதவியும் அவள் மகள் மணிமேகலையும் துறவு மேற்கொண்டு, குடும்பம் என்ற சிறிய அலகைவிட்டு வெளிவந்துவிடுகின்றனர். பெண்கள் அறநெறிகளின் தூதுவர்களாய் இடம்விட்டு இடம்பெயர்ந்து சமூகப்பணிகளில் மனஞ்செலுத்துகின்றனர். இப்படைப்புகளை, இதே வகையில் வெளிப்படுத்தாது, கோவலனுக்காக நீதி கேட்டவள் கண்ணகி என்றும், கோவலன் விட்டுச்சென்றதால் துறவறம் புகுந்தாள் மாதவி என்றும் கோவலனை மய்யப்படுத்தி ‘கற்பு’ என்பதை பெண், ஆண் உறவு என்ற ஒற்றைப் பரிமாணத்தில் வைத்துப்பார்க்கவும் நமது இலக்கிய மேடைகள் பயன்பட்டுவருகின்றன.

**பண்பாட்டுக் கூறுகள்**

பாலியல் பற்றிய அறிவு மீன்குஞ்சு நீரில் நீந்துவது போல சுலபமாகத் தோற்றம் அளித்தாலும், அது சிக்கலான பின்னங்களைக் கொண்டிருக்கிறது. அது, ஒழுக்கம் சார்ந்த சமூக விதிகளோடு தொடர்புடையது என்பதும், உடல் இயல்பூக்கத்தில் இல்லாதபொழுதில் பாலியலுக்கான பல்வேறு தூண்டல்கள் வெவ்வேறு ஊடகங்கள் மூலம் தொடர்ந்தவண்ணமிருக்கிறது என்பதும், பரஸ்பர விருப்பங்களை மீறி அது உறவைப் பலப்படுத்தும் கருவியாகக் கையாளப்படுகிறது என்பதும், பாலுறவு சிக்கலான பல தளங்களுடன் பிணைந்திருப்பதைக் காட்டுகின்றன. பாலுறவு வெறும் கேளிக்கையா என்றால், இல்லை என்றும், உறவைப் பலப்படுத்தும் செயல் மட்டுமா என்றால் இல்லை என்றும், பாலுறவு இனவிருத்திக்கு மட்டுமானதா என்றால் இல்லை என்றும் நாம் கூறுவோம்.

**சமூகப் பிரச்சினைகள்**

ஹெச்.ஐ.வி. பால்வினை நோய்கள், மார்பகப்புற்று, மனநோய் போன்ற பல்வேறு நோய்களின் தளத்திலிருந்தும், கருக்கலைப்பு, தகப்பனற்ற குழந்தை, தனித்துக் குழந்தையுடன் வாழும் பெண் போன்ற பெண் - சமூகப் பிரச்சனைகளின் தளத்திலிருந்தும் பாலுறவை நோக்குவது ஒரு வகையான அணுகுமுறை. இனவிருத்தி சாராத இன்பக்கேளிக்கையாகக் கருதுவது மற்றோர் அணுகுமுறை இவையிரண்டும் இயல்பிலேயே வேறுபடுகின்றன.

குடும்பம் என்பது தனிச்சொத்து சார்ந்த சிறுநிறுவனம். மூதாதையர் சொத்துக்கள், தாங்கள் சுயமாகச் சேர்த்த சொத்துகள் இவற்றைப் பாதுகாக்கவும் பேணவும் இது சிதறிப்போகாதவண்ணம் உறவுகளை மிக இறுக்கமாக இருத்திக்கொள்ளவும் போதுமான புனைவுகளுடன் உருவானது இது. இது தனி என்ற வரையறைக்குள் வருகிறது. தனி என்று வரையறுக்கப்பட்டாலும் இக்குடும்பத்தின் விதிகள் அல்லது சட்டங்கள் யாவும் அரசு – சமூக மதநிறுவனங்களாலேயே இயற்றப்பட்டும் கட்டுப்படுத்தப்பட்டும் வருகின்றன.

**கதைக்களம்**

புதினமானது தனக்கென்றே அமைந்த ஒரு பெரிய கதைக்களத்தைக் கொண்டது. ஒரு நெடிய கதையையும், கதைமாந்தர் பலரையும் புதினம் உள்ளடக்கியது.தனிமனிதனின் சிக்கல்கள் மற்றும்

சமுதாய வாழ்க்கையின் பல பகுதிகளையும் சித்திரித்துக் காட்டுவதற்குரிய நிகழ்விடமாகப் புதினத்தின் கதைக்களம் உள்ளது. ஓவியக்கலைக்குத் திரை இருப்பதுபோலவும், ஆடற்கலைக்கு அரங்கின் அவசியம் போலவும் புதினத்திற்குக் களமாக அமைவது கதையே ஆகும்.

**கதைக்கரு**

ஒரு படைப்பிற்கு அடித்தளமாக அமைவது மையக்கரு (Theme) எனப்படும். அம் மையக்கரு இயற்கையாக அமைதல் நலம். இது புதினத்திற்கும் பொருந்தும். அதுபோல், புதினத்திற்கு எதுவும் மையக்கருவாக அமையும். இக்கதைக்கருவானது நல்ல கதைப்பின்னல் நிகழ்ச்சிகள், பாத்திரப்படைப்புகளின் உணர்ச்சிகள், உரையாடல், உத்திகள், காட்சிகள், வருணனைகள், எளிய நடை ஆகியவற்றைக் கொண்டதாக அமையும்போது புனைவிலக்கியத்தின் தலையாயதாக விளங்கும் புதினம் சிறப்படைகிறது.

**கருப்பொருள்**

தனி மனித வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள், வரலாற்று உண்மைகள், சமுதாய பிரச்சினைகள், அன்றாட நிகழ்வுகள்,அரசியல் போக்குகள், உளவியல் சிக்கல்கள், தனிமனித வாழ்வியல் கோட்பாடுகள், பெண்ணடிமைத்தனம், தனிமனிதர் வழிபாடு, விளிம்புநிலை வாழ்க்கை, உலகமயமாக்கல் விளைவுகள், சுற்றுச்சூழல் முதலானவை புதினத்திற்குரிய கதையின் கருப்பொருள்களாக அமையும்.

**கதையும்,கதைப்பின்னலும் (Plot)**

கதை என்பது காலக்கிரமப்படி அமையும் நிகழ்ச்சிகளின் வரிசையேயாகும். 'பிளாட்" (கதைப்பின்னல்) என்பது கிரமப்படி அமைந்த நிகழ்ச்சிகளிடையே காரண-காரியத் தொடர்பை ஏற்றி உரைப்பது என்பார் இ.எம்.பாஸ்டர். தமிழில் பிளாட் என்பதைக் கதைப்பின்னல் அல்லது கதைத்திட்டம் ஆகும். இதுவே கதைக்கு வடிவ அழகைத் தருகிறது. கதையில் வரும் நிகழ்ச்சிகள் இயல்பாக நிகழுதல் நல்லது. கதைக்கேற்றவாறு நிகழ்ச்சிகள் விரியப்பெற்று வளர்ச்சியடைந்து பெருகி ஒரு முழுமைபெறுவது புதினத்தின் போக்காகும்.

**காதல்**

பெண், ஆண் மனமொத்து வாழும் காதல் வாழ்க்கை என்பது பெரும்பாலும் குறுகிய காலம்தான். குடும்பம் பெண்ணை ஒடுக்கும் நிறுவனமாகச் செயல்படுவதால் காதல் தொடர்வதில்லை. இதன் அடிப்படைகள் ஆண் சார்ந்த கருத்தியல்களே. ஒரு பெண்ணின் பிறப்பு முதல், பூப்பெய்தல், திருமணம், உறவுகள் வரை ஆணாதிக்கக் கருத்தியல்களே ஆதிக்கம் செலுத்துகின்றன. ஒரு பெண்ணின் பிறப்பு வரவாக வைக்கப்படாமல் செலவாக எழுதப்படுகிறது. பூப்பெய்துவதைத் திருமணத்திற்கான தயார் நிலையாக அறிவிப்பதின் மூலம் திருமணம் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மையப்புள்ளியாக நிலைநிறுத்தப்படுகிறது. எத்துணை படிப்பு, பட்டம், பதவி, பணமிருந்தாலும் நிறைவான திருமணவாழ்க்கையே அவளது வெற்றியைத் தீர்மானிக்கும் என்ற சமூகமதிப்பீடு பரவலாக இருக்கிறது. இதனால் பொதுவாழ்வில் ஈடுபடுதலும், ஒரு குறிப்பிட்ட துறையில் சமூகத்திற்கான பெண்ணின் பங்களிப்பும் தேவையற்றதாக்கப்படுகின்றது. பெண்ணின் சூழல் என்பது குடும்பம், சுற்றத்தார் என்ற அளவில் சுருக்கம் பெறுகின்றது. பாலுறவு என்பது திருமணம் என்ற கட்டுப்பாட்டுக்குள்ளே நிகழும்படி வற்புறுத்தப்படுகின்றது. பெண்ணின் தனித்தேவைகளும் சமூகத்தேவைகளும் குடும்பம் என்ற நிறுவனத்துக்குள்ளே சுழல்கின்றன. பெண் விவாகரத்து பெற்றாலும் வேறொரு நபருடன் திருமணம் - குடும்பம் இவற்றுள்தான் பிணைக்கப்படுகிறாள். எல்லா ஆண்களும் குடும்பம் என்பதைத் தங்கள் அதிகாரம் இயங்கும் தளமாகவே காணுவதால் அவள் வாழ்வில் பெரிய மாற்றம் நிகழ்வதில்லை – நபர் மாற்றம் தவிர.

**துணைநூற்பட்டியல்**

1. உடலரசியல், சிவகாமி, பனிக்குடம் பதிப்பகம் வெளியீடு, முதல் பதிப்பு, டிசம்பர் 2007.
2. உண்மைக்கு முன்னும் பின்னும், சிவகாமி, உயிர்மை பதிப்பகம் வெளியீடு, முதல் பதிப்பு, டிசம்பர் 2012.